( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

CC No. 82/2022

Name : Kannan **P.W. -1**(LW -1 )

Father/Husband Name : Deivasigamani

Caste :

Calling :

Religion :

Age :

Date : 19-12-2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2024.

**முதல் விசராணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. நான் தற்போது கேளம்பபாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்திர் மிசின் ஆப்ரேட்டராக வேலை செய்கிறேன். எனது சொந்தமான TN19P2332 என்ற பல்சர் வண்டியில் 14/04/2019 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் கேளம்பபாக்கம் அரசு மேல்நிலைபள்ளிக்கு வெளியே நிறுத்தி விட்டு அருகில் இருந்த கடைக்கு சென்றேன். மாலை 6 மணியளவில் நான் திரும்பி வந்து பார்த்போது வண்டியை காணவில்லை அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தேன் கிடைக்கவில்லை, அதனால் அன்று கேளம்பாக்கம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். மறுநாள் போலிசார் அழைத்து எனது வாகனம் கிடைத்து விட்டது என்று சொன்னார். எனது வண்டியை திருடி சென்ற நபர்களை கேளம்பாககம் காவல் நிரைலயத்தில் பிடித்த வைத்து இருந்தார்கள். நான் அவர்களை காவல் நிலையத்தில் பார்த்தேன். வாகனத்தை திருடிய ஒரு நபரை போலிசார் பிடித்து வைத்த இருந்தார்கள் நான் பார்த்தேன். நான்கு வருடங்களுக்கு மேல் ஆனதால் எனக்கு ஞாபகம் இல்லை. 20 நாட்கள் கழித்து மற்ற இரண்டு எதிரிகளை கைது செய்ததாக சொன்னார்கள். அவர்கள் தான் எனது வண்டியை திருடியதாக போலிசார் சொன்னார்கள். நான் எனது வண்டிரயை நீதிமன்றத்மிர் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். இன்று நான் எனது வண்டியை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் கொடுக்கப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **( மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) நீதிமன்றத்திலல் ஆஜர் செய்யப்பட்டுள்ள வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை – எதிரிகள் ஆஜர் வழக்கறிஞர் ஆஜர்**

போதிய அவகாசம் வழுங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பதால் இத்துடன் முடிக்கப்படுகிறது.

S/d- N.Anupriya, 19.12.2024

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.